12 DEC 2008
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

நகராட்சி ஊழியர்களுக்கான வீட்டுமனை ஒதுக்கீடு— பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான நகர வார்டு எண். 7-இல் நகரளவு எண். 442/ஏ, 2பி, 442/3 மற்றும் 442/4-இல் உள்ள 6.85 ஏக்கர் நிலம் வீட்டுமனைப்பிரிவுகளாக அமைக்கப்பட்டது – சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 464/1991, 465/1991-இல் தீர்ப்பு நாள் 27.10.1998 மற்றும் மேல்முறையீட்டு எண். 1124/1999 மற்றும் 1125/1999-இல் 2.12.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி பொள்ளாச்சி நகராட்சியின் 110 ஊழியர்களுக்கு வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நதி5) துறை

அரசாணை(நிலை) எண். 251 நாள்.11.12.2008.
திருவள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 26

படிக்கப்பட்டது.

1. அரசாணை(நிலை) எண். 169, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 19.1.1972.

படிக்க:

2. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண். 464 மற்றும் 465/1991-இல் 27.10.1998 நாளிட்ட தீர்ப்பு.
3. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மேல் முறையீட்டு எண். 1124 மற்றும் 1125/1999-இல் வழங்கப்பட்ட தீர்ப்பு நாள் 2.12.2004.
4. பொள்ளாச்சி நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கத்தின் கடித நாள். 8.2.2005.
5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித நக எண். 3285/05/டிபி3, நாள். 7.5.007.
6. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித நக. எண். 3285/2005/டிபி3, நாள். 22.4.2008.
7. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித நக.எண். 3285/2005/டிபி3, நாள். 19.11.2008.

---

ஆணை:

பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான வடுகபாளையம் நகர வார்டு எண். 7-இல் நகரளவு எண். 442/ஏ, 2பி, 442/3 மற்றும் 442/4-இல் உள்ள மனையிடத்தை நகராட்சி ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்காக முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சில வரைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2. அரசாணை (நிலை) எண். 730, ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 14.1.1976-இல் நகர்மன்றம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை விற்கவும் மாற்றவும் தடை விதிக்கப்பட்டதால் அரசாணை(நிலை) எண். 163, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 19.1.1972-இன் படி நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டுமனை ஒப்படைவு செய்வது பொள்ளாச்சி நகராட்சி ஆணையரால் மறுக்கப்பட்டதால், நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கத்தினரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். 464/1994 மற்றும் 465/1994 மற்றும் அதனைத் தொடர்ந்து தொடரப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீட்டு எண்கள் 1124/1999 மற்றும் 1125/1999-இல் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட 2.12.2004 நாளிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பில் தகுதிவாய்ந்த 110 நகராட்சி ஊழியர்களுக்கு பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டுமனை -களை ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

3. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி வீட்டுமனை ஒதுக்கீடுகளை மேற்கொள்ள ஏதுவாக உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 110 பணியாளர்களுக்கும் அவர்களின் வருமானத்தை கணக்கில் கொள்ளாமல், வடுகபாளையத்தில் உள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்வதற்காகவும், பட்டியலில் கண்டுள்ள 110 நபர்களில் நகராட்சியில் பணிபுரிந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பணி மாறுதல் செய்து பணிபுரிந்த /பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கும் மற்றும் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் வீட்டுமனை ஒதுக்கீடு செய்யுமாறு அரசின் ஆணையினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொள்ளாச்சியில் உள்ள 6.85 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து நகராட்சி ஊழியர்களின் குடியிருப்பிற்காக ரூபாய் 1,08,714/- செலுத்தப்பட்டு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி வாங்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தினை நகர்மன்றம் ஏற்றுக் கொண்டுள்ளதாலும், உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படியும் தகுதியான நகராட்சி ஊழியர்களுக்கு ஒதுக்க ஆணையிடப் பட்டுள்ளதாலும் மேற்கண்ட நிலம் வேறு பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த இயலாது எனவும், நகர் ஊரமைப்பு ஆணையர் தனது கடித எண். 24567/07/எல்.எ நாள். 21.2.2008-இல் 110 மனைகளுக்கான தொழில்நுட்ப வரைபட அனுமதி அளித்துள்ளார் எனவும், லாப நட்டமற்ற நிலையில், (No profit and No loss) மனை ஒதுக்கீடு ஏற்கனவே உயர்நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின்படி 110 நகராட்சி ஊழியர்களுக்கு மட்டுமே வழங்க இயலும் எனவும் முந்தைய அடிப்படை ஊதியம் ரூபாய் 85/-க்கான தற்போதைய அடிப்படை ஊதியம் ரூபாய் 3050-75-3950-80-4590 எனவும், வீட்டுமனைகளாக ஒதுக்கப்படவுள்ள நிலத்தின் தற்போதைய வழிகாட்டி மதிப்பு ரூ.1,025/- எனவும் குறிப்பிட்டுள்ளார்.

5. நிலத்தின் மொத்த விஸ்தீரணத்தில் தெருக்கள், சாலைகள், பூங்காக்கள் மற்றும் திறவிடங்கள் நீங்கலாக மனைகளுக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தின் பரப்பளவு 1 ஏக்கர் 166.90 சதுர அடிக்கான (15511 சதுர மீட்டர்) தொகை ரூபாய் 1,58,98,932/-என கணக்கிடப்பட்டுள்ளதாகவும்,110 நகராட்சி ஊழியர்கள் தங்களது உறுதியாவணத்திலை (Undertaking) சமர்ப்பித்துள்ளதாலும் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகுதியான நபர்களின் அடிப்படையில், பட்டியல் (List of eligible persons) தயாரிக்கப்படும் எனவும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலும் தனது அறிக்கையில், நிலத்தின் 1974-ஆம் ஆண்டின் மதிப்பான ரூபாய் 1,08,174/-க்கு கூட்டு வட்டியாக 12 சதவீதத்தினை, வட்டியாக நிர்ணயம் செய்யப்பட்டு, 2008-ஆம் ஆண்டு வரை ரூபாய் 50,99,673/- ஆக கணக்கிடப்பட்டுள்ளதாகவும், அதனுடன் மனைபட அனுமதிபெற செலவிடப்பட்ட தொகையான ரூபாய் 33,600/- மற்றும் குடிநீர்வசதி இணைப்பிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினமான ரூபாய் 5,25,000/-யினையும் சேர்த்து ரூபாய்.56,58,273/-யினை மொத்த நில மதிப்பாக கணக்கிடப்பட்டுள்ளதாக பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதாகவும் நகரின் மேம்பாட்டிற்காக அதாவது சாலைகள் அமைத்தல், குறும்பாலங்கள் கட்டுதல், கழிவுநீர் வடிகால் வசதி ஆகியவற்றிற்கான செலவுகளை நகராட்சி அலுவலர்கள் சங்கம் ஏற்றுக் கொள்வதாகவும், மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்க நகராட்சிகளின் சட்டத்தின்படியான ஒதுக்கீட்டிற்கான ரூபாய் 5,25,000/-யினை மேற்படி சங்கத்தினால் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்து மேற்படி 110 நபர்களுக்கு மனை ஒதுக்கீடு செய்ய அனுமதி அளிக்குமாறு ஆணை வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை வழக்கு எண். 464/1991, 465/1991-இல் தீர்ப்பு 27.10.1998 மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீட்டு எண். 1124/1999 மற்றும் 1125/1999-இல் 2.12.2004 நாளன்று அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான நகர வார்டு எண்.7-இல் நகர சர்வே எண். 442/ஏ, 2பி, 442/3 மற்றும் 442/4-இல் உள்ள 6.85 ஏக்கர் நிலத்தினை வீட்டுமனைகளாக பிரித்து, நீதிப்பேராணை மேல்முறையீட்டு எண். 1124/1999 மற்றும் 1125/1999-இல் 2.12.2004 நாளன்று அளிக்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்ட 110 பொள்ளாச்சி நகராட்சிப் பணியாளர்களுக்கு, அரசாணை (நிலை) எண். 730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள். 14.4.1976-இல், நகர்மன்றம் மற்றும் நகராட்சிகளுக்குச் சொந்தமான சொத்துக்களை விற்கவும் மாற்றவும் விதிக்கப்பட்டுள்ள

தடையினை சிறப்பு நேர்வாக தளர்வு செய்து, நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் தொழில்நுட்ப வரைபட அனுமதியின் அடிப்படையில், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் வீட்டுமனைகளை ஒப்படைக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

அ) உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 110 பணியாளர்களுக்கும் குலுக்கல் முறையில் அவர்களின் வருமானத்தை கணக்கில் கொள்ளாமல், வடுகபாளையத்தில் உள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

ஆ) மேற்படி 110 நபர்களில் நகராட்சியில் பணிபுரிந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பணி மாறுதல் செய்து பணிபுரிந்த / பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இ) மேற்கண்ட பட்டியலில் உள்ள 110 பணியாளர்களில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கும் மனை ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

ஈ) நிலத்தின் 1974-ஆம் ஆண்டின் மதிப்பான ரூபாய் 1,08,174/-க்கு கூட்டு வட்டியாக 12 சதவீதம் வட்டி நிர்ணயிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு வரையிலான மதிப்பாக ரூபாய் 50,99,673/-யினை நிர்ணயித்து அதனுடன் வரைபட அனுமதிக்காக நகர் ஊரமைப்பு ஆணையருக்கு அளிக்கப்பட்ட ரூ. 33,600/- மற்றும் குடிநீர்வசதி இணைப்பிற்கான செலவினமான ரூபாய் 5,25,000/-யினையும் சேர்த்து ரூபாய் 56,58,273/- (ரூபாய் ஐம்பத்தியாறு லட்சத்து ஐம்பத்தியெட்டாயிரத்து இருநூற்று எழுபத்தி மூன்று மட்டும்)யினை மொத்த நில மதிப்பாக நிர்ணயித்துள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உ) நகரின் மேம்பாட்டிற்காக அதாவது சாலைகள் அமைத்தல், குறும்பாலங்கள் கட்டுதல், கழிவுநீர் வடிகால் வசதி ஆகியவற்றிற்கான செலவுகளை நகராட்சி அலுவலக சங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு மேற்படி சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாமல் நகராட்சியே மக்களின் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும்பட்சத்தில் அதற்குரிய மேம்பாட்டுச் செலவான ரூபாய் சுமார் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினை அந்தந்த மனை ஒதுக்கீடுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும், மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க மேற்கொள்ளப்படும் நகராட்சிகளின் சட்டத்தின்படியான செலவான ரூபாய் 5,25,000/-யினை மேற்படி சங்கத்தினால் மனை ஒதுக்கீட்டின் பொழுது நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

ஊ) மனை ஒதுக்கீடு பெற்றவரோ அல்லது அவருடைய வாரிசுகளோ மனை ஒதுக்கீடு பெற்ற 15 (பதினைந்து) வருடங்களுக்குள்ளாக மனையினை வேறொருவருக்கு மாற்றவோ / விற்பனை செய்யவோ கூடாது என்றும் ஒதுக்கீடுதாரர்கள் தங்களது மனைகளில் மனை ஒதுக்கீடு பெற்றபின் நகர்மன்றம் நிர்ணயிக்கும் காலக்கெடுவிற்குள் வீடுகளை கட்ட வேண்டும் என்றும், மனை ஒதுக்கீட்டுக்காக நிர்ணயிக்கப்படும் தொகையினை ஒதுக்கீடு பெற்றவர்கள் முழுவதுமாக செலுத்திய பிறகே மனை ஒப்படைக்கப்பட வேண்டும். இதில் தவணை முறையோ அல்லது கடன் முறையினையோ பின்பற்றக்கூடாது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-600 005.
நகர் ஊரமைப்பு ஆணையர், 802, அண்ணாசாலை, சென்னை-600 002.
நகர்மன்றத் தலைவர், பொள்ளாச்சி நகர்மன்றம்.
நகராட்சி ஆணையர், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
(நகர்மன்றத் தலைவர் வழியாக)
பொள்ளாச்சி நகராட்சி உயர்நிலை அலுவலர்கள் சங்கம்,
பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
11/12